[1972 ஆகஸ்ட் 18

நாகப்பட்டிணத்தில் படகு கட்டும் தளம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாகப்பட்டிணத்தில் படகு கட்டும் தளம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளதா?

(இ) அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து: இல்லை, ஐயா.

Interest free loans for the Backward Classes and Scheduled Caste Persons.

* 54. Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the total amount and the various trades and professions to which interest free loans have been given for the benefit of Backward Classes and Scheduled Castes persons during 1970-71 and 1971-72 in Madras City?

பின் தங்கிய, அரிசன வகுப்பினருக்கு வட்டியில்லாக் கடன்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகரில் 1970-71, 1971-72-ஆம் ஆண்டுகளில் பின் தங்கிய அரிசன வகுப்பினரின் நலனுக்காக எந்தெந்த வர்த்தகங்களுக்கும், தொழில்களுக்கும் மொத்தத்தில் எவ்வளவு தொகை வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பின்தங்கிய மக்களுக்கு சிறு தொழில் ஆரம்பிக்க வட்டியில்லாக் கடன் வழங்கப்படுவதில்லை. அரிசனங்களுக்கு சிறு தொழில் நடத்த வட்டியில்லாக் கடன் வழங்கப்பட்டு வருகின்றது. சென்னை நகரத்தைப் பொறுத்த மட்டில், 1970-71, 1971-72 ஆண்டுகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு சிறு தொழில் நடத்த வழங்கப்பட்ட தொகையும், தொழில்களும் தனியாக இணைப்பில் @ கூறப்பட்டிருக்கின்றன.

@ 179 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.